தினகரன் கர்நாடகா • வியாழக்கிழமை • 27.2.2014

## அரசு அலுவலகங்களில்

# சந்தனமர கலை பொருட்கள் பயன்பாடு

## வீரப்பமொய்லி வலியுறுத்தல்

பெங்களூர், பிப். 27: மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் சந்தன மரத்தில் தயாரிக்கப்பட்ட கலை பொருட்களை பயன்படுத்த வேண்டும் என்று மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் எம்.வீரப்பமொய்லி தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்று இந்திய மர அறிவியல் சங்கம் சார்பில் சந்தன மரத்தை பாதுகாத்தல் மற்றும் பயன்பாடு என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது. அதில் மரம் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு மலர் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொண்டு ஆளுநர் எச்.ஆர்.பரத்வாஜ் பேசுகையில், சுற்றுச்சூழலுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்காமல் போனால், எதிர்காலத்தில் பெரிய ஆபத்துகளை சந்திக்க நேரிடும்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்காமல் விட்டதால், இயற்கை சீற்றத்திற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது. உலகில் ஒருபக்கம் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. மறுபுறம் இயற்கை சொத்துகள் நாசமாகி வருகிறது. வனத்தை பாதுகாக்காமல் விட்டால் மழை, சுத்தமான காற்று கிடைக்காமல் போகும். இதனால் பெரியளவில் இயற்கை சீற்றம் ஏற்பட்டு உயிரினங்கள் பலியாகும் சூழ்நிலை ஏற்படும்.

சந்தனம் நமது இந்திய கலாச்சாரத்தின் முக்கிய பங்கு வகிக்கிறது. உலக அமைதிக்காக நடத்தப்படும் யாகம், ஹோமங்களில் சந்தன கட்டை பயன்படுத்துகிறார்கள்.

மக்கள் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகிவிட்ட சந்தன மர வளர்ச்சியை முன்னெடுத்து செல்ல வேண்டும். நாட்டிற்கு சந்தன மரத்தின் தேவை அதிகம் உள்ளது. அதை எங்கெல்லாம் பயிர் செய்ய முடியுமோ அதை செய்ய வேண்டும். வீரப்பன் கும்பலால் நடிகர் ராஜ்குமார் கடத்தி செல்லப்பட்ட போது நான் மத்திய அமைச்சராக இருந்தேன். அவரை காப்பாற்ற கர்நாடக அரசு முயற்சித்தபோது, எனது பங்களிப்பை கொடுத்தேன்.

வீரப்பன் போன்ற சிலரின் செயலால் சந்தன மரம் அழிவின் பாதையை நோக்கி சென்றது. நமது நாட்டில் தற்போது சந்தன மரத்தின் தேவை குறைவாகவுள்ளது. அதை அதிகரிக்க வேண்டும். அதற்கான முயற்சியை வனத்துறை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மத்திய அமைச்சர் மொய்லி பேசுகையில், கன்னட மண்ணை சந்தன கூடு என்று பெருமையுடன் அழைக்கிறோம். காரணம் நாட்டில் சந்தன மரம் பயிர் செய்வதில் கர்நாடகம் முதலிடத்தில் உள்ளது. 18ம் நூற்றாண்டில் கர்நாடகாவில் ஆட்சி நடத்திய திப்புசுல்தான், சந்தனமரம் வளர்ப்பதை ஊக்கப்படுத்தினார். மாநிலத்தில் உள்ள வனபகுதியில் சந்தன மரம் வளர்க்கும் திட்டம் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத்தில் சந்தனமரத்திற்கு ராஜ மரியாதை கொடுக்கப்படுகிறது. நான் மாநில அமைச்சராக இருந்த 1970ம் ஆண்டுகளில் மாநிலம் முழுவதும் 12 இடங்களில் சந்தன மரம் கொண்டு கலை பொருட்கள் தயாரிக்கும் மையங்கள் அமைத்தேன். அவை தற்போதும் சிறப்பாக இயங்கி வருகிறது.

மாநிலத்தில் சந்தன காடுகளை அழித்த வீரப்பனை பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட அதிரடிப்படையில் சீனிவாசன் போன்ற போலீஸ் அதிகாரிகள் தமது உயிரை கொடுத்தனர். அவர்களின் தியாகத்தால் இன்றும் மாநிலத்தில் சந்தனமரம் உள்ளது. இதை மேம்படுத்த வேண்டுமானால், மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் சந்தன மரம் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களை பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக விரைவில் முதல்வர் சித்தராமையாவுக்கு கடிதம் எழுதுவேன் என்றார்.



பெங்களூரில் நேற்று இந்திய மர அறிவியல் சங்கம் சார்பில் சந்தன மரத்தை பாதுகாத்தல் மற்றும் பயன்பாடு என்ற தலைப்பில் நடந்த தேசிய கருத்தரங்கில் மரம் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு மலரை ஆளுநர் பரத்வாஜ், வீரப்பமொய்லி வெளியிட்டனர்.